
# யானை காதல்

துணிச்சல் மிகுந்த பெண் விஞ்ஞானி சிந்தையா மோஸ்ஸின் உண்மை வரலாறு

டோனி பூஸோ

தமிழில் கிருஷ்ணன்



ஒரு உயரமான குதிரையை கற்பனை
செய்து பாருங்கள்
அதன் உயரம் எவ்வளவு என்றால் அதை
அண்ணாந்து பார்த்தால் வானமே
மறைந்து விடும் போன்று இருந்தது.
அந்த உயரமான குதிரையில் ஒரு குட்டி
சிறுமியை கற்பனை செய்து பாருங்கள்.
விண்ணை தொடும் தூரத்தில்
பூமியிலிருந்து அண்ணாந்து பார்க்கும்
உயரத்தில்.
அந்த குட்டி சிறுமியின் பெயர் **சிந்தையா
ஜேன் மோஸ்**.
அவள் எதற்கும் பயப்படுபவள் அல்ல.





சிந்தையாவுக்கு பனிரெண்டு வயதாகும் போது கெல்லி என்னும் குதிரையில் மேல் சவாரி செய்வாள். அவளுடைய வீடு ஒஸ்ஸினிங், நியூ யார்க்கில் இருந்தது.
சிந்தையாவும், கெல்லியும் காட்டிற்குள் பயணம் செய்யும் போது இயற்கை நிறைந்த சூழலில் மான்களையும், நரிகளையும் மற்ற விலங்குகளையும் பார்த்திருக்கிறார்கள்.
இதனாலேயே அவளுக்கு காட்டில் குதிரை சவாரி செய்வதற்கு மிகவும் பிடிக்கும்.




பதினாறு வயதில் சிந்தையா தனியாக குதிரையில் பயணம் மேற்கொண்டாள்.
நானூறு மைல்களுக்கு அப்பால் உள்ள விர்ஜினியா நகரத்தில் இருந்த ஒரு பள்ளியில் போய் சேர்ந்தாள். அங்கு எல்லா மாணவர்களுக்கும் குதிரை சவாரி சொல்லி கொடுக்கப்பட்டிருந்தது. அதனால் அங்கு அவளை போன்று நிறைய பேருக்கு குதிரை சவாரி பிடித்திருந்தது.

சிந்தையா பட்டப்படிப்பை முடித்த போது கூட அவள் என்ன செய்ய போகிறாள் என்று தெரியாது. கூடிய சீக்கிரமே அவள் வாழ்க்கையில் விஞ்ஞானி ஆக போவதையும், ஒரு பெரிய திருப்புமுனை வரப்போகிறது என்பதையும்  உணரவில்லை.



சிந்தையா ஒரு மாத இதழில் ரிப்போர்ட்டராக வேலை செய்யும் போது அவளுடைய கல்லூரி தோழி ஆப்பிரிக்காவிலிருந்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். அதில் ஆப்பிரிக்காவை பற்றி நிறைய குறிப்பிட்டுருந்தாள். ஆப்பிரிக்கா உலகிலேயே இரண்டாவது பெரிய கண்டமாகும். அந்த கடிதங்களை படிக்கும் போதெல்லாம் ஆப்பிரிக்காவை பார்க்க வேண்டும் என்ற ஆவல் சிந்தையாவுக்கு ஏற்படும். அப்போதெல்லாம் ஆப்பிரிக்காவிற்கு போவதென்றால் நிறைய பேருக்கு பயமே ஏற்படும் ஆனால் சிந்தையாவிற்கு அப்படியில்லை அவள் எதற்கும் அஞ்சுபவள் அல்ல.


ஆப்பிரிக்கா வந்த ஒரு வாரத்திலேயே அவளுக்கு அந்த நாட்டின் மீது காதல் ஏற்பட்டுவிட்டது. ஏதோ தான் கடைசியாக தன் சொந்த வீட்டிற்கே வந்து விட்டது போல உணர்ந்தாள். பறந்து விரிந்த சவான்னாஹ் காடுகளிலேயே தன் மீதி வாழ் நாட்களை வாழ்ந்து விட வேண்டும் என எண்ணினாள்.




அங்கு வாழ்வதற்கு அவளுக்கு ஒரு வேலை தேவைப்பட்டது .அவளுடைய நல்ல நேரம் யானையை பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த ஒரு ஸ்காட்டிஷ் விலங்கியல் விஞ்ஞானியை சந்திக்க நேர்ந்தது. அவர் சிந்தையாவை யானைகளை புகைப்படம் பிடிப்பதற்கு அழைத்தார்.
ஆப்பிரிக்க யானைகள் தான் இந்த பூமியிலேயே மிகப்பெரிய விலங்கினம் ஆகும்.

உங்களிடம் ஒரு கேமரா இருக்கிறது என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் ஒரு விலங்கியல் பூங்காவில் இருக்கிறீர்கள். அதில் எங்கு பார்த்தாலும் யானைகள் நிறைந்திருக்கின்றன. அதன் குட்டி சிகப்பு கண்களும், சுருக்கங்கள் நிறைந்த சாம்பல் நிற தோலும், வலுவான அதே நேரத்தில் மடங்கக்கூடிய தந்தங்களும், மணல் மூட்டை போன்ற பாதங்களும் உங்களை எப்படி பாதிக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். முதலில் எல்லா யானைகளும் ஒன்று போல் தான் இருக்கும்.

சிந்தையா யானைகளின் எல்லா பாகங்களையும் உன்னிப்பாக கவனித்து பார்த்தாள். அதன் முறம் போன்ற காதின் நரம்புகளையும், மடிப்புகளையும் கூர்ந்து கவனித்தாள். அதன் நீண்ட தந்தங்களை பொறுமையாக ஆராய்ச்சி செய்தாள். அதில் வளைந்தது, நேராக இருந்தது, உடைந்தது என ஒவ்வொரு யானைக்கும் விதவிதமாக இருப்பதை கவனித்தாள்.





சிறிது காலத்திலேயே சிந்தையா அங்கிருந்த யானைகளின் மேல் காதல் கொண்டாள். அவைகள் வாழ்ந்த காடுகள் எவ்வளவு அழகாக இருந்ததோ அதே போல யானைகளும் அவளுக்கு அழகாக தோன்றியது.
“அங்கிருந்த யானைகள் மிகவும் ஈர்க்க கூடியவைகளாக இருந்தன. அவைகளிடம் இருந்து நாம் படிக்க வேண்டிய குணாதிசயங்கள் நிறைய உள்ளன” என்று சிந்தையா கூறினாள். இப்படி பிறந்தது தான் அம்பொசெலி யானைகள் ஆராய்ச்சி ப்ராஜெக்ட்.

அப்போது கூட சிந்தையா உணரவில்லை அவர் வாழ்க்கையை இதற்காகவே அர்ப்பணிக்க போகிறார் என்று. அப்போது அவர் நினைத்ததெல்லாம் இந்த யானைகளை தீவிரமாக படிக்க வேண்டுமென்று.







அவைகள் எப்படி குடும்பமாக ஒன்றாக இருக்கின்றன. நீண்ட மழை காலங்களில் புற்கள் அடர்த்தியாக  வளர்ந்திருக்கும் போது யானைகள் எப்படி குழுக்களாக கூடி ஒன்றாக இருக்கின்றன. அதே போல வறட்சி காலத்தில் எப்படி ஒருவருக்கொருவர் உதவி கொள்கின்றன என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பதே அவரது எண்ணமாக இருந்தது.

சிந்தையா நிறைய புகைப்படம் எடுத்தார். அவைகளை வீட்டிற்கு எடுத்துச் சென்று அவருடைய பூதக்கண்ணாடி கொண்டு தீவிரமாக கவனிப்பார். யானைகளின் காதுகள் எவ்வளவு வித்தியாசமாக இருக்கின்றன என்பதை வகைப்படுத்தி கொள்வார்.

ஒவ்வொரு யானைக்கும் பேரும் வைத்தார். ஆதாம், அகதா, ஆல்பர்ட், அலிஸ், ஆமி, அனபெல் என, சில சமயம் பெரிய காதன் என்று கூட ஏனென்றால் முதலில் மனதில் தோன்றும் பெயரை அவரால் நிராகரிக்க முடியவில்லை.

சிந்தையா ஒரு நிரந்தர முகாமை அம்பொசெலி நேஷனல் பூங்காவில் அமைத்தார். அவருடைய கூரை வேய்த குடிலிலிருந்து பனி நிறைந்த கிளிமஞ்சாரோவின் மலை உச்சி தெரிந்தது. அதுவே ஆப்பிரிக்காவின் உயர்ந்த மலையாகும்.





சிந்தையா அவருடைய லேண்ட் ரோவர் காரில் ஒவ்வொரு நாளும் பூங்காவில் வளம் வருவார். அப்படி வரும் போது குட்டி யானைகள் புரண்டு உருளுவதை கண்டு ரசிப்பார். அதே சமயத்தில் தாய் யானைகள் குட்டிகளை விளையாட விட்டு புலிகள், ஓநாய்களிடமிருந்து காப்பதற்கு காவல் இருப்பதையும் கவனித்தார்.

யானைகள் பிரிந்து செல்வதும் ஒன்று கூடுவதும் வழக்கமாக இருந்தது. அப்படி கூடும் போது உடம்பை இருபக்கமும் ஆட்டுவது. தும்பிக்கையை பின்னி கொள்வது, காதுகளை ஆட்டுவது, தந்தங்களால் இடித்து கொள்வது போன்ற செயல்களை செய்தன. கூடவே கத்தியும், உறுமியும், ட்ரம்பெட் ஊதுவதை போன்று ஒரு சத்தம் உண்டாக்கும். இப்படி தான் யானைகள் ஒருவொருக்கொருவர் ஹலோ சொல்லி கொள்கின்றன.

சிந்தையா இந்த யானைகளின் மிகவும் வயதான பாட்டி யானைகளை கூட சில நேரங்களில் பார்க்க நேர்ந்தார். வறட்சி காலத்தில் அவைகளுக்கு மட்டுமே உணவு, தண்ணீர் எங்கு கிடைக்கும் என்று தெரியும். அவருக்கு மிகவும் பிடித்த யானை **“எக்கோ”**. அது ஒரு மிக பெரிய தந்தம் உள்ள பாட்டி யானை. அதை பின் தொடர்ந்து சென்று நிறைய விஷயங்களை கற்று கொண்டார் சிந்தையா. பல நாட்களுக்கு பிறகு ஒரு முறை எக்கோ சிந்தையாவின் கார் லேண்ட்-ரோவரை நோக்கி மெதுவாக நடந்து வந்தது. தொடும் அருகில் வந்து நின்றது. அமைதியாக சிந்தையாவை நோக்கி ஒரு பார்வை பார்த்தது. அந்த பார்வை ஹலோ சொல்வது போலவே இருந்தது.

சிந்தையா தொடர்ந்து கண்காணித்ததில் யானைகளின் குடும்ப அமைப்பு அவருக்கு புரிய வந்தது. யானைகளின் நடத்தை கிட்டத்தட்ட மனிதர்களை போன்று தான். அதன் குழுக்குள் ஒருவரையொருவர் பாதுகாத்து கொள்வதும், ஒற்றுமையாய் இருப்பதும், அரவணைப்பதும் பல நேரங்களில் நம் நண்பர்களிடம் என்ன எதிர்பார்க்கிறோமோ அதை போலவே அதன் நடவடிக்கைகளும் இருக்கும்.



உண்மை கசப்பானது எல்லா மனிதர்களும் சிந்தையாவை போல யானையை அன்பாக பார்க்கவில்லை. பத்து வருடத்தில் மட்டும் பாதிக்கு பாதி யானைகள் அழிக்கப்பட்டுவிட்டன. அதாவது ஒவ்வொரு பத்து நிமிடத்திற்கும் ஒரு யானை கொள்ளப்பட்டிருக்கிறது.
கற்பனை செய்து பாருங்கள் பெரிய ஆண் யானை மெதுவாக நடந்து சென்று கொண்டே புற்களையும், புதர்களையும் தின்று கொண்டே செல்கிறது. அதன் தந்தங்கள் கம்பீரமாக இருக்கிறது. மறுநாளே அந்த யானை நீங்கள் பார்த்த இடத்தில் செத்து கிடக்கிறது. அதன் அழகான தந்தங்கள் இப்போது இல்லை. நீங்கள் எப்படி உணர்வீர்கள்? இந்த தந்தங்களை வைத்து தான் பியானோவில் இருக்கும் விசைகள், நகைகள் மற்றும் பல விலை உயர்ந்த பொருட்கள் செய்யப்படுகின்றன.

இப்படி பல வயதான யானைகள் காணாமல் போகவே சிந்தையாவுக்கு வேதனையாக இருந்தது. இந்த வயதான யானைகள் இல்லாமல் போனால் அதன் சந்ததியினரின் வாழ்க்கை முறை எப்படி  மாறப் போகிறது என்பதே அவரின் கவலையாக இருந்தது .
தந்தை யானை இறந்து போனால் யார் அதன் குட்டிகளை பேணுவார்கள்?
இதனால் குட்டி யானைகளுக்கு என்ன பாதிப்பு வரும்?
உணவு,  தண்ணீர் எங்கிருக்கிறது என்று குட்டிகளுக்கு யார் காண்பிப்பார்கள்?



சிந்தையா எல்லா இடங்களிலும் இந்த யானை தந்தம் வியாபாரத்தை கடுமையாக விமர்சித்தார். யானை தந்தம் மிக அழகான பொருள் தான் அதை செதுக்கிய பின் வரும் பளபளப்பு வேறு எந்த பொருளிலும் வராது. ஆனால் இந்த விலை உயர்ந்த பொருள் ஒரு வாழும் யானையின் பல்லாகும் என்பதை மனிதர்கள் மறந்து விடுகிறார்கள். இதற்காக கொள்ளையர்கள் யானையை கொலை செய்கிறார்கள். இந்த யானை தந்தம் வியாபாரத்தை உலகத்தில் எல்லா இடங்களிலும் சட்ட விரோதமானதாக்க சிந்தையா போராடினார். அது ஒரு பெரிய சவாலாக இருந்தது. ஆனால் பெரிய சவால்களுக்கு எப்போதும் அஞ்சியவர் இல்லை சிந்தையா.




1990 ல் யானை தந்தம் வியாபாரம் உலகம் முழுக்க தடை செய்யப்பட்டது.
ஆனால் அப்போது கூட சில நாடுகள் விதிவிலக்காக அதற்கு ஒப்புதல் தரவில்லை.
இன்னும் யானை தந்தத்திற்கு உலக கருப்பு சந்தையில் மிகவும் கிராக்கி இருக்கத்தான் செய்கிறது.
யானையின் பல்லிற்காக அதை கொள்வது இன்னும் நடந்து கொண்டு தான் இருக்கிறது.
சிந்தையாவும் அதற்கு எதிராக குரல் எழுப்பி கொண்டு தான் இருக்கிறார்.



அம்போசலி யானைகள் ஆராய்ச்சி ப்ரொஜெக்ட்டை சிந்தையா ஆரம்பித்து 40 வருடம் கடந்து விட்டது. குதிரையில் சவாரி செய்து கொண்டிருந்த சிறுமி  தான் அம்போசலி யானைகளின் குடும்பத்தில் ஒருவராக இருப்பார் என்று கனவில் கூட அவர் நினைத்ததில்லை. 2500 யானைகளுக்கும்  மேல் சிந்தையா ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவைகளின் பிறப்பையும் இறப்பையும் ஆவணப்படுத்தி இருக்கிறார் குறிப்பாக அவரது விருப்பத்துக்குகந்த பாட்டி யானை எக்கோ வையும் சேர்த்து. எக்கோ 2009ல் இறந்து விட்டது.

இப்போது சிந்தையாவின் கவனம் எல்லாம் யானைகளை பற்றி விழிப்புணர்வு உண்டாக்குவதிலும், நிதி திரட்டுவதிலும் இருந்தாலும் அவர் இன்றும் யானைகளை கூர்ந்து கவனித்தும், படித்தும், ஆவணப்படுத்திக் கொண்டு தான் இருக்கிறார். குழந்தைகளுக்காக நிறைய புத்தகங்களையும் எழுதி இருக்கிறார். அவர் வாழ்க்கையை முழுவதும் யானைகளின் ஆராய்ச்சிக்காகவே அர்ப்பணித்து விட்டார். எக்கோ, எக்கோவின் குழந்தைகள் அனைத்தையும் பின் தொடர்ந்து ஆவணப்படுத்தியுள்ளார். இன்னும் பூங்காவில் வர போகும் யானைகளுக்காகவும் காத்திருக்கிறார்.



இது ஒரு கடினமான வேலை தான்.
ஆனால் சிந்தையா மோஸ் எப்போதும்
கடினமான வேலைக்கு அஞ்சாதவர்.



சிந்தையா மோஸ் 1940ல் பிறந்தார். கடந்த 40 வருடங்கள் அம்போசலி நேஷனல் பூங்காவில் தன் வாழ்க்கையை யானைகளை ஆராய்ச்சி செய்வதில் அர்ப்பணித்து விட்டார். விர்ஜினியா மாகாணத்தில் சதன் செமினரி கல்லூரியில் பட்டப்படிப்பு முடித்தவுடன் ஸ்மித் கல்லூரியில் தத்துவப் படிப்பு படித்தார். அதன் பின் நியூஸ் வீக் எனும் பத்திரிகையில் ஆராய்ச்சியாளரும், ரிப்போர்ட்டருமாக பணி புரிந்தார். இந்த சமயத்தில்தான் அவருடைய கல்லூரி தோழி பென்னி நைலர் ஆப்பிரிக்காவிலிருந்து சிந்தையாவுக்கு கடிதம் எழுதினார். அதில் ஆப்பிரிக்காவை பற்றி விவரமாக எழுதியதன் காரணமாகவே சிந்தையாவுக்கு ஆப்பிரிக்கா செல்லவேண்டுமென்ற ஆசை எழுந்தது. அதுமட்டுமல்லாமல் அவருடைய பெற்றோர்களின் இறப்பு அவரை அமெரிக்காவிலிருந்து ஆப்ரிக்காவிற்கு இடம்பெயர்க்க செய்தது.
சிந்தையா ஆப்பிரிக்கா சென்ற போது முதலில் ஸ்காட்டிஷ் விலங்கியல் ஆராய்ச்சியாளர் இயன் டக்ளஸ் ஹாமில்டன் என்பவரை சந்திக்க நேர்ந்தது. அவர் மான்யரா தேசிய பூங்காவில் யானைகளின் மீதான ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். அவருக்கு புகைப்படங்கள் எடுப்பதற்கு ஒருவர் தேவைப்பட்டார். அந்த வேலையை சிந்தையாவுக்கு கொடுத்தார். சில காலத்தில் அந்த ப்ராஜெக்ட் முடிந்தவுடன் சிந்தையா தானே ஒரு ஆராய்ச்சி ப்ராஜெக்ட் செய்ய வேண்டுமென்ற ஆசை வந்தது. அந்த ஆசை 1972 ல் நிறைவேறியது. சிந்தையா அவருடைய சக ஆராய்ச்சியாளர் ஹார்வே கிரோஸ் என்பவரும் சேர்ந்து அம்போசெலி ஆராய்ச்சி ப்ராஜெக்ட்டை அம்போசெலி தேசிய பூங்காவில் ஆரம்பித்தனர். இந்த பூங்கா 150 மைல் பாதுகாக்கப்பட்ட பூங்காவாகும். சிந்தையாவின் இந்த ஆராய்ச்சி ஆப்பிரிக்க யானைகளை பற்றி விவரமாக தெரிந்து கொள்வதற்கு மிகவும் உதவியாக இருந்தது. இந்த ஆராய்ச்சி நீண்ட காலமாக தொடர்ந்தது.
கடந்த 40 வருடங்களாக சிந்தையா யானைகளை படிப்பதிலேயே செலவழித்து விட்டார். அவர்மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் மூலம் யானைகளின் குடும்ப அமைப்பு, நடத்தை, நுண்ணறிவு போன்றவை உலகத்துக்கு தெரிய வந்தது. சிந்தையாவின் பொறுமை காரணமாகவே இவ்வளவு விவரங்கள் சேகரிக்க முடிந்தது. யானைகளை பற்றி பேசும் போது அவரது நண்பர்களை போலவே அன்பாக பேசுவார்.

பல ஆராய்ச்சியாளர்கள் ஆப்பிரிக்க யானைகளின் மீது ஆராய்ச்சி செய்திருந்தாலும் குறிப்பாக இயன் டக்ளஸ் ஹாமில்டன் செய்த ஆராய்ச்சி யானைகளின் அசைவுகளை பற்றியானது. அவரது முன்னெடுப்பால் தான் யானை தந்தம் வியாபாரம் 1989ல் உலகம் முழுக்க தடை செய்யப்பட்டது. அவர் யானைகள் பாதுகாப்பு இயக்கம் (www.savetheelephants.org) ஒன்றை ஆரம்பித்தார். அதன் காரணமாகவே ஆப்பிரிக்க யானைகளை பற்றி மேலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது மட்டுமில்லாமல் அதை பாதுகாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. சிந்தையாவின் உதவியாளர் டாக்டர் ஜோய்ஸ் பூல் யானைகளின் சமூக நடவடிக்கைகளையும், எவ்வாறு தொடர்பு கொள்கின்றன பற்றியும் விவரமாக ஆராய்ச்சி செய்துள்ளனர். இவரும் அவரது துணைவரும் சேர்ந்து யானையின் குரல் (www.elaphantvoices.org) என்ற யானைகளை பாதுகாக்கும் ப்ரொஜெக்ட்டை கிழக்கு ஆப்ரிக்காவில் உள்ள மாசை மாறா என்ற தேசிய பூங்காவில் உருவாக்கியுள்ளனர்.



ஆப்ரிக்காவில் உள்ள யானைகள் அழிந்து வருகின்றன. யானைகளை பற்றி உலகில் உள்ள மக்கள் எவ்வளவு விழிப்புணர்வு அடைகிறார்களோ அவ்வளவு நாம் யானைகளை அழிவிலிருந்து மீட்டு எடுக்க முடியும். சிந்தையா போன்ற ஆராய்ச்சியாளர்கள் இதற்காக அவர்கள் வாழ்க்கையை அர்பணித்திருக்கிறார்கள்.